முருகப்பெருமான் துணை

**மகான் நாதாந்தச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.07.2023, சனிக்கிழமை

1. மாதவ பலம் கொண்ட ஞானியே
மண்ணுலகம் காக்க வேண்டி
ஆதரவாய் தரும சேவை துவக்கி
அறம் வழி மக்கள் நடந்திட
2. நடந்திட அற்புதம் நடத்துகின்ற
ஞானியே உன் பெருமை கூறி
இடர்வெல்ல அறிவுரை ஆசி
இயம்புவேன் சோபகிருது நள்ளி திங்கள்
3. திங்களிலே சஷ்டிதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 06 ம் நாள், 22.07.2023, சனிக்கிழமை)
தேசிகனுக்கு நாதாந்தச் சித்தரும்
பங்கமிலா ஆன்மீக சமூக வளர்ச்சி
பாருலகம் கண்டடைய உரைப்பேன்
4. உரைக்கவே வழிகாட்டும் சக்தியாக
உலகுக்கு உயர்ஞானி உம்மை
கறைபடியா கந்தப் பெருமானும்
கலியில் அனுமதித்து இருக்க
5. இருக்கவே ஏகாந்த கதிநிலை
இணையில்லாத வண்ணம்
கருத்தாக அடைந்த ஞானியே
கருணைமட்டுமே உம்மிடமிருந்து
6. இருந்து தொண்டனை மக்களை
இயக்குவதாக இருக்க வேண்டும்
வருந்தும் வண்ணம் சொற்குற்றம்
வாக்காக வெளிப்படக் கண்டால்

7. கண்டாலே மக்களிடை தொடர
கடைபிடிக்க முடியா தடை
உண்டாகி அஞ்ஞான நிலை
உலகினை வளைத்திட நேரும்

8. நேருமைக்கு நீதிக்கு வழிகாட்ட
நீயே கலியின் சிறந்த ஞானி
ஆறுமுகனார் தேர்வு என்றால்
ஆதிசிவன் அம்மை மால் பிரம்மனும்

9. பிரம்மனும் வியந்த அவதாரம் நீ
பிரணவக்குடில் என்பது
வரம்தர மட்டும் உள்ள சபை இல்லை
வாழ்வையே மாற்றும் ஞானசபை

10. ஞானசபை ஞானிகளின் சபை
நல்ல மக்கள் ஞானபலமுள்ளவரும்
தானாக வந்து சேர்ந்து ஆற்றல்
தவசி உன்னால் முழுமை அடையும் சபை

11. அடையவே ஆத்மார்த்த சரணாகதி
அரங்கன் மேல் அனைவருக்கும் பெருகி
தடையற உலகே ஞானலோகம்
தவராசன் அன்பே உலகை மாற்றும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—